7301

Register Number | | | | | |

# தமிழ் - முதல் தாள்

# Language – Part A – TAMIL – Paper I

நேரம் : $2\frac{1}{2}$ மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

குறிப்பு : i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினவாகவும் இருத்தல் வேண்டும்.

ii) வினா எண் IV - க்குச் செய்யுள் வடிவில் விடை எழுதுதல் வேண்டும்.

I. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் எட்டனுக்கு மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $8 \times 2 = 16$

1. திரு. வி. க. அவர்கள் படைத்த நூல்களுள் இரண்டனைக் கூறுக.

2. எந்நிலத்தில் விளையுள் குன்றும் ?

3. பிறர் தன்னைப் புகழுங்கால் யாது செய்தல் வேண்டும் ?

4. போதிலார் திருவினாள் யார் ? விளக்குக.

5. கொலையாளிகளின் கொடுஞ்செயல்கள் யாவை ?

6. கடலின் கவின்மிகு காட்சி யாது ?

7. வள்ளத்தோள் பாடலை மொழிபெயர்த்தவர் யார் ?

8. நன்மாறன் பகைவர்க்கும், பாவலர்க்கும் எத்தகையோன் ?

[ Turn over

9. சுற்றுப்புறத்தைக் காக்க எதனைத் தவிர்த்திடுவோம் எனக் கவிஞர் பூங்கோவன் குறிப்பிடுகின்றார் ?

10. பாணன் எங்கு பாடினான் ? எவ்வளவு நேரம் பாடினான் ?

II. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $3 \times 5 = 15$

11. கவிஞர் தமிழை எவ்வாறு வாழ்த்துகிறார் ?

12. சினத்தின் தீங்கினை விளக்குக.

13. சீதையைக் கண்ட அனுமனின் மகிழ்ச்சியை விவரிக்க.

14. திருவேங்கடத்து இறைவனை நம்மாழ்வார் எங்ஙனம் போற்றியுள்ளார் ?

15. விண்மீன் கூட்டத்திற்குக் காட்டப்பட்ட உவமைகளைத் தொகுத்து எழுதுக.

III. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் பதினைந்து வரிகளுக்கு மிகாமல் விடை எழுதுக : $1 \times 7 = 7$

16. ஊக்கமே சிறந்தது என்பதனையும், அதனை உடையாரது உயர்ச்சியையும் விளக்கி எழுதுக.

17. மங்கல வாழ்த்துப் பாடலால் தெரியவரும் கண்ணகி கோவலன் பண்புநலன்களை விளக்கி எழுதுக.

18. குமரகுருபரர் மீனாட்சியம்மையினை எவ்வாறு சிறப்பித்துள்ளார் ?

19. பாரதியார் கூறும் பாரத பூமியின் பெருமைகளைத் தொகுத்து எழுதுக.

IV. பின்வருவனவற்றை அடிபிறழாமல் எழுதுக : 2 + 2 + 3 + 3 = 10

20. 'நிலவரை' எனத் தொடங்கும் குறளையும், 'உயர்வு' எனமுடியும் குறளையும் எழுதுக.

21. அ) 'நாடெலாம் வளர' எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை எழுதுக.

ஆ) ''தன்னரிய'' - எனத் தொடங்கும் இரட்சணிய யாத்திரிகப் பாடலை எழுதுக.

V. கீழ்க்காணும் **அனைத்து** வினாக்களுக்கும் விடை எழுதுக : 10 × 1 = 10

22. மயங்கொலிப் பிழையை நீக்கி எழுதுக :

நெருப்பு என்னும் பொருள் தரும் சொல் சேர்ந்தாரைக் .................. என்பதாகும் ( கொல்லி / கொள்ளி )

23. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

திரிகடுகத்தை இயற்றியவர் ..................... .

அ) காரியாசான் ஆ) நல்லாதனார்

இ) நாகனார் ஈ) கணிமேதையார்.

24. விரிமழைக் குலங்கிழித் தொளிரும் மின்னென விளங்கியவள் ................ .

அ) சீதை ஆ) கண்ணகி

இ) தோழி ஈ) தலைவி.

25. ''நஞ்சனைய நமக்கீது நேர்ந்தது மெய்'' - யார், யாரிடம் கூறியது ?

26. வேரல் வேலி வேர்க்கோட் பலவின்

- இத்தொடரில் ............... அமைந்துள்ளது.

அ) எதுகை

ஆ) மோனை

இ) இயைபு.

[ Turn over

27. கீழ்க்காணும் குறட்பாவைச் சீர்பிரித்து எழுதுக :

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று.

28. பழம்பெரும்பூமி என்னும் தொடரைப் பிரிக்கும் முறை ..................... .

அ) பழம் + பெரும் + பூமி

ஆ) பழமை + பெருமை + பூமி

இ) பழமை + பெரும் + பூமி.

29. சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக:

பூக்களில் இருப்பது ம_____ம். ( ன / ண )

30. மலை என்னும் பொருள் தரும் சொல் ................ . ( பொறுப்பு / பொருப்பு )

31. பொருத்துக :

| நூல் | ஆசிரியர் |
|---|---|
| அ) இயேசு காவியம் | 1. உமறுப்புலவர் |
| ஆ) சீறாப்புராணம் | 2. இளங்கோவடிகள் |
| | 3. கண்ணதாசன். |

VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **ஐந்தனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : 5 × 2 = 10

32. இந்தியாவின் தேவைகளென அப்துல் கலாம் குறிப்பிட்டுள்ளவை யாவை ?

33. மு. வ. அவர்களுடைய நெஞ்சில் இனிப்பது எது ?

34. இமயம் என்பது நெ.து. சு. விற்கு எவற்றை நினைவுபடுத்துகிறது ?

35. குடும்பத்தில் பிறக்கும் உயர்ந்த குணங்கள் யாவை ?

36. வாலை வாரிதி எத்தகு சிறப்புக்கு உரியவன் ?

37. செல்வர்கள் ஔவையாரிடம் வேண்டியது என்ன ?

38. வ.உ. சி. அவர்களுக்குத் தமிழ்நாட்டிலுள்ள நினைவுச் சின்னங்கள் யாவை ?

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் **மூன்றனுக்கு** மட்டும் ( ஒவ்வொன்றிற்கும் ஆறு வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $3 \times 5 = 15$

39. அப்துல் கலாம் நம் மக்களை எவ்வாறு மூவகைப்படுத்துகிறார் ?

40. இல்வாழ்க்கை எப்படி வளரவேண்டும் என மு. வ. வாழ்த்துகிறார் ?

41. வ.உ. சி. அவர்களின் பண்பு நலன்களை எழுதுக.

42. 'நீர்ப் பொருளின் சுருங்கா இயல்பு' - விளக்குக.

43. உமறுப் புலவரின் நன்றி மறவாப் பண்பினை விளக்குக.

VIII. கீழ்க்காணும் வினாக்களுள் ஏதேனும் **ஒன்றனுக்கு** மட்டும் ( பதினைந்து வரிகளுக்கு மிகாமல் ) விடை எழுதுக : $1 \times 7 = 7$

44. 'அனைவரும் கல்வி பெறவேண்டும்' என்பதைத் தமிழ்த் தென்றல் திரு. வி. க. எவ்வாறு விளக்குகிறார் ?

45. அமிர்த கவிராயரின் ஒருதுறைக்கோவை அரங்கேற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து எழுதுக.

46. சாதி வேற்றுமையையும், தீண்டாமைக் கொடுமையையும் ஒழித்ததில் பெரியாரின் பங்கு பற்றித் தொகுத்து எழுதுக.

47. பெண்களுக்கு மனையியல் கல்வி மிக வேண்டற்பாலது என்பதனை விளக்குக.

[ Turn over

IX. கீழ்க்காணும் அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக : $10 \times 1 = 1$

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக :

48. 2010ஆம் ஆண்டிற்கு முன்னதாகவே இந்தியாவிலிருந்து ஒழிக்கப்பட வேண்டியது ................ .

அ) கல்லாமை

ஆ) வறுமை

இ) வேலையில்லாத் திண்டாட்டம்.

49. இளங்கோவின் காவியப் பெண்மணி ................ .

அ) கஸ்தூரிபாய்

ஆ) கியூரி அம்மையார்

இ) கண்ணகி.

50. கோடிட்ட இடத்தை நிரப்புக :

தொழிற் பயிற்சியும் .................... பட்டதே.

51. கீழ்க்காணும் வாக்கியம் எவ்வகை வாக்கியம் ?

வ.உ. சிதம்பரனார் செய்ந் நன்றி மறவாச் செம்மல்.

52. கீழ்க்காணும் தொடரிலுள்ள சந்திப் பிழைகளைத் திருத்துக :

தனிவாழ்க்கையில் சிக்கனக்காரராகிய ஈ.வெ. ராமசாமி பொது தொண்டை பொறுத்த மட்டில் தாராளமான தியாகி.

53. கீழ்க்காணும் உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக :

அ) மலர்விழி ஆ) பவள வாய்.

54. கீழ்க்காணும் சொற்களிலிருந்து 'உலகம்' என்னும் பொருள்தரும் சொற்கள் இரண்டனை எழுதுக :

அ) பார் ஆ) கமலம்

இ) புவி ஈ) தாமரை.

55. கீழ்க்காணும் தொடரில் காணப்பெறும் ஒருமை, பன்மைப் பிழையை நீக்குக :

பாம்புக்குக் கண்ணே காதாக உதவுகின்றன.

56. வேற்றுமை உருபைச் சேர்த்து எழுதுக :

இவர் ............... புகழ்ந்து பாட வேண்டும்.

( கு, ஐ, ஆல், கண் )

57. கீழ்க்காணும் தொகைச் சொற்களுள் ஏதேனும் ஒன்றினை விரித்து எழுதுக :

அ) முத்தமிழ் ஆ) நாற்றிசை.